

சிவகங்கை மாவட்டம் பாகனேரி கத்தப்பட்டில் வாளுக்கு வேலி அம்பலம் பிறந்த நாளை முன்னிட்டு முதல்வர் அவர்களின் உத்தரவின் பேரில் அமைச்சர்கள் ஐ.பெரியசாமி,கேஆர்.பெரியகருப்பன், பி.மூர்த்தி ஆகியோர் அவரது சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். உடன், திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ,மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷாஅஜித்,பொதுக்குழு உறுப்பினர் பி.டி.ஆர்.முத்து ஆகியோர் உள்ளனர்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (10.06.2023) சென்னை துறைமுகத்தில், தமிழ்நாடு காவல் துறையில் மகளிர் காவலர்கள் பொன்விழா ஆண்டை முன்னிட்டு “சென்னை - கோடியக்கரை - சென்னை” பாய்மரப் படகு பயணத்தை கொடியசைத்து தொடங்கி வைத்தார். உடன் இந்து சமயஅறநிலையத் துறை அமைச்சரும் மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் தலைவருமான பி.கே.சேகர்பாபு, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, காவல்துறை தலைமை இயக்குநர் முனைவர் செ.சைலேந்திர பாபு, சென்னை துறைமுக பொறுப்புக் கழகத் தலைவர் சுனீல் பலீவால், தமிழ்நாடு சீருடை பணியாளர் தேர்வுவாரியத்தின் தலைவர்/காவல்துறை இயக்குநர் திருமதி.சீமாஅகர்வால், கடலோர பாதுகாப்பு குழுமம் முனைவர் சந்தீப் மித்தல் ஆகியோர் உள்ளனர்.

### ஆதாரமற்ற குற்றச்சாட்டுகள் கூறும் தமிழ்நாடு பா.ஜ.க. தலைவர்

# அண்ணாமலை மீது - கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு அவதூறு வழக்கு!

## சென்னை - சைதாப்பேட்டை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார்!

சென்னை, ஜூன் 11-

தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை மீது தி.மு.க. பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., சென்னை, சைதாப்பேட்டை நீதிமன்றத்தில் அவதூறு வழக்கு தொடர்ந்துள்ளார்.



கடந்த மாதம் 14ஆம் தேதி, தி.மு.க.வினர் 12 பேரின் சொத்து பட்டியல் என தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை அறிக்கை ஒன்றை வெளியிட்டார். மேலும் முதல்வர் மு.க.ஸ்டாலின் உள்ளிட்ட தி.மு.க.வினர் குறித்து பல்வேறு உண்மைக்குப் புறம்பான குற்றச்சாட்டுகளையும் அவர் முன்வைத்தார்.

இதையடுத்து குற்றச்சாட்டப்பட்டவர்களிடம் இருந்து அண்ணாமலைக்கு நோட்டீஸ்கள் அனுப்பப்பட்டன. ஆனால், தான் தெரிவித்த குற்றச்சாட்டை மறுக்க முடியாது என்றும், வழக்கை எதிர்கொள்ளத் தயார் என்றும் அண்ணாமலை தரப்பில் பதில் நோட்டீஸ் அனுப்பப்பட்டது.

இந்நிலையில், சென்னை மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் அண்ணாமலை மீது முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சார்பில் கடந்த 10ம் தேதி கிரிமினல் அவதூறு வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. அந்த வழக்கு 8 வாரத்துக்கு தள்ளிவைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், நாடாளுமன்ற கழகக் குழுவின் தலைவரும், தி.மு.க. பொருளாளருமான டி.ஆர்.பாலு, அண்ணாமலைக்கு எதிராக சென்னை சைதாப்பேட்டை 18வது நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் அவதூறு வழக்கு தாக்கல் செய்தார்.

அந்த மனுவில் அவர் கூறியிருப்பதாவது:-

1957ம் ஆண்டு முதல் அரசியலில் இருந்து வருகிறேன். எம்.பி.யாகவும், மத்திய அமைச்சராகவும் பதவி வகித்துள்ளேன். கட்சியிலும் பல்வேறு பொறுப்புகளை வகித்துவருகிறேன். எனக்கு சமுதாயத்திலும், பொதுமக்கள் மத்தியிலும் நற்பெயரும் மரியாதையும் உள்ளது. அதை சீர்குலைக்கும் விதமாக, களங்கம் ஏற்படுத்தும் விதமாக அண்ணாமலை அவதூறான ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை எனக்கு எதிராகச் சுமத்தியுள்ளார்.

எங்கள் குடும்பத்தினர் 21 நிறுவனங்களில் பல கோடி ரூபாய் முதலீடு செய்துள்ளதாக குற்றம்சாட்டியுள்ளார். ஆனால் அவர் கூறும் நிறுவனங்களில், 3 நிறுவனங்களில் மட்டும் சிறு முதலீடு செய்து உள்ளேன். மற்ற நிறுவனங்களில் பங்குதாரராகவும் இல்லை. பொய்யான குற்றச்சாட்டைக் கூறி எனது நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தியதற்காக அண்ணாமலை எனக்கு நஷ்டஈடு வழங்க வேண்டும். இதுதவிர அவர் மீது கிரிமினல் அவதூறு சட்டத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அம்மனுவில் கூறப்பட்டுள்ளது.

இந்த வழக்கு விரைவில் விசாரணைக்கு வரவுள்ளது.

டி.ஆர்.பாலுவுடன் வந்த தி.மு.க. அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

அண்ணாமலை பேட்டியளித்த அரை மணி நேரத்துக்குள்ளேயே தி.மு.க. சார்பில் பதில் தந்து விட்டோம். அவருக்கு நோட்டீஸ் அனுப்பி ஒரு மாதமாகியும் இதுவரை சட்டரீதியாகப் பதில் சொல்லவில்லை. அறிக்கை மட்டுமே வெளியிடுகிறார். போதுமான அவகாசம் கொடுத்த பிறகும், மன்னிப்பு கேட்காததால் 2 நாட்களுக்கு முன்பு முதல்வர் ஸ்டாலின் அவர்கள் சார்பிலும், தற்போது டி.ஆர்.பாலு சார்பிலும் வழக்குத் தொடர்ந்துள்ளோம்.

**ஓராண்டு தண்டனை பெறுவார்!**

தி.மு.க.வுக்கு, யார் மீதும் பொய் வழக்கு போடும் பழக்கம் கிடையாது. தி.மு.க. சார்பில் தொடரப்பட்ட அனைத்து வழக்குகளிலும் வெற்றி பெற்றுள்ளோம். நிச்சயமாக அண்ணாமலை ஓராண்டு தண்டனை பெறப் போகிறார்.

இவ்வாறு அவர் கூறினார்.

மூத்த வழக்கறிஞர் பி.வில்சன், ப.தாயகம் கவி எம்.எல்.ஏ. உள்ளிட்டோர் அப்போது உடன் இருந்தனர்.

### நெல்லை மாவட்டத்திற்கு

# சுற்றுலா பயணிகள் வருகை அதிகரிப்பு!

## அமைச்சர் கா.இராமச்சந்திரன் தகவல்!

நெல்லை, ஜூன் 11-

நெல்லை மாவட்டம் கொக்கிரகுளம் பகுதியில் ரூபாய் 80 லட்சம் செலவில் புதுப்பிக்கப்பட்ட தமிழ்நாடு ஹோட்டல் தங்கும் விடுதி,அமுதகம் உணவகம் திறப்பு விழா நிகழ்வு தமிழ்நாடு சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு தலைமையில் சுற்றுலாத்துறை இயக்குனர் சந்தீப் நந்தூரி,நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன்கான்,நெல்லை நாடாளுமன்ற உறுப்பினர் சா. ஞானதிரவியம்,பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல்வகாப் மாவட்ட ஆட்சியர் மரு. கார்த்திகேயன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் சுற்றுலாத்துறை அமைச்சர் கா ராமச்சந்திரன் பங்கேற்று திறந்து வைத்தார்.

பின்னர் அமைச்சர் கா.ராமச்சந்திரன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது.

முதலமைச்சர் அவர்களின் உத்தரவுப்படி சுற்றுலாத்துறையை மேம்படுத்த பல்வேறு பணிகள் நடந்து வருகிறது.நெல்லை மாநகரின் மையப் பகுதியில் சுற்றுலாதுறையின் கட்டுப்பாட்டில் அமைந்திருக்கும் தங்கும் விடுதி ரூபாய் 73 லட்சம் மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்டுதிறக்கப்பட்டுள்ளது. சுற்றுலா வளர்ச்சி கழகமே நேரடியாக அந்த தங்கும் விடுதியை நிர்வகித்து வருகிறது. நவீன காலத்திற்கு ஏற்ப தமிழ்நாடு சுற்றுலா துறையின் கீழ் உள்ள தங்கும் விடுதிகள் மேம்படுத் தப்பட்டுள்ளது.

நெல்லை மாவட்டத்தில் உலக பிரசித்தி பெற்ற பத்தமடை பாய் விற்பனையை அதிகரிக்கும் வகையில் சுற்றுலாதுறை மூலம் அதனை பிரபல படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தமிழகத்தில் பிரசித்தி பெற்ற திருநெல்வேலி நெல்லையப்பர் கோவில்,கிருஷ்ணாபுரம் வெங்கடாஜலபதி கோவில்,பாபநாசம் பாபநாச நாதர் கோயில் மற்றும் பாபநாசம் அகத்தியர் அருவி, திருக்குறுங்குடி நம்பி கோவில்,உவரி சுயம்புலிங்க சுவாமி கோயில் மற்றும் உவரி கப்பல் மாதா தேவாலயம் உள்ளிட்ட நெல்லை மாவட்டத்தின் பிரபல சுற்றுலாத் தலங்களை ஒருங்கிணைத்து சுற்றுலா பயணிகள் வருகை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மணிமுத்தாறு பகுதியில் முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட சுற்றுச்சூழல் பூங்கா திட்டத்திற்கு ரூபாய் 5 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.பூங்கா அமைப்பது தொடர்பான ஆய்வுப் பணிகள் நடந்து வருகிறது விரைவில் பணி தொடங்கும்.

தென்காசி மாவட்டம் குற்றாலத்தில் சுற்றுலா பயணிகளை ஈர்க்கும் வகையில் ரூபாய் 15 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பல்வேறு பணிகள் நடந்து வருகிறது.

திருநெல்வேலி,தூத்துக்குடி மாவட்டங்களில் தாமிரபரணி நதிக்கரையில் அமைந்துள்ள நவ திருப்பதி, நவகைலாய ஆன்மீக ஸ்தலங்களை ஒன்றிணைத்து சுற்றுலாவிற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.நெல்லை மாவட்டத்தில் கடந்த 2020-2021 ஆம் ஆண்டில் 31.98 லட்சம் சுற்றுலா பயணிகள் வருகை வந்துள்ளனர்.கொரோனா நோய் தாக்கம் காரணமாக சுற்றுலா பயணிகள் எண்ணிக்கை குறைந்துள்ளது.தற்போது மீண்டும் சுற்றுலா பயணிகள் வருகை நெல்லை மாவட்டத்தில் அதிகரித்துள்ளது.

கோவில்கள்,நீர்வீழ்ச்சி உள்ளிட்ட சுற்றுலா தலங்களை ஒருங்கிணைத்து சுற்றுலா பயணிகளின் வருகையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அமைச்சர் கா. ராமச்சந்திரன் தெரிவித்தார்.

## ‘வாட்ஸ் அப்’ பில் வலம் வந்தது!




# முதல்வரின் சிறப்பு மேட்டூர் அணை திறப்பு



**கோ**டையிலே வெயில்வந்து
கொளுத்துகிற சூழலிலே
மேடையிலே வீசுகிற
மெல்லிய பூங்காற்றாய்!

நம் முதல்வர் ஸ்டாலின்
நற்செய்தி தருகின்றார்
எம் முதல்வர் எனப் போற்ற
இதயத்தில் நிறைகின்றார்!

காவிரி டெல்டாவின்
கடைமடை விவசாயிகள்
ஆவலுடன் எதிர்பார்த்ததை
அற்புதமாய்ச் செய்கின்றார்!

வாட்டமுற்ற நெஞ்சிலே
வார்த்திட்ட பால்போல
மேட்டூர் அணை திறந்து
மெய்சிலிர்க்க வைத்திட்டார்!

கடந்த கால ஆட்சியிலே
கண்ணீர்விட்ட விவசாயிகள்
அடைந்திட்ட துயரங்களை
அரை நொடியில் தீர்த்திட்டார்!

சரியான நேரத்தில்
சரியான முடிவெடுத்து - பூமி
தரிசாகப் போகாமல்
தவிர்த்திட்டார் தளபதி…!

விவசாயி மனங்குளிர்ந்தால்
வீடெல்லாம் மணக்குமென்ற
புவிபோற்றும் உண்மையை
புரிந்தவரே நம் முதல்வர்!

பிறந்திட்ட மண்ணுக்குப்
பெருமை சேர்க்கின்ற
சிறந்த முதல்வருக்கு
நிறைந்த வாழ்த்துக்கள்!

எப்போதும் தமிழகம்
எழிலோடு விளங்கிட
முப்போகச் சாகுபடிக்கு
முறையாகச் சிந்திக்கிறார்!

புவிபோற்றும் வகையிலே
புதுமை பல வகுத்து
நவீன “கரிகாலனாய்”
நம்மிடையே வாழ்கின்றார்!

நாட்டின் விவசாயமே
நமது உயிர் நாடி என - நிலை
நாட்டிய தளபதியை
நலமுடனே வாழ்த்துவோம்!

தமிழகத்தின் நலனையே
தாரக மந்திரமாக்கி
இமைபோல காக்கின்ற
எம் முதல்வர் வாழியரே…!

இதுபோல நன்மைகள்
இனிப்பாகத் தொடரட்டும்
சாதனைகள் படர்ந்து
சரித்திரம் படைக்கட்டும்!

ஓங்கட்டும் செழுமை…
ஒழியட்டும் வறுமை…
- எதையும்
தாங்குகிற தளபதியால்
தழைக்கட்டும் வளமை…!

காவிரித் தாயே - எங்கள்
கண்மணி நீயே…!
மேவுகிற தமிழகத்தின்
மேனி செழிப்பதற்கு!

ஆவலுடன் ஓடிவந்து
அகம் நனைப் பாயே…!
பூவிரித் தாயே - தளபதிக்கு
புகழ்கூட்டு வாயே…!

நேரிலே ஆய்வு செய்து
நேர்மையுடன் செயலாற்றும்
சீர்மிகு முதல்வரை
சிறப்புற வாழ்த்திடுவோம்!



- கவிஞர் இரவி பாரதி



மதுரை மாநகராட்சி சார்பில் ரேஸ்கோர்ஸ் விளையாட்டு மைதானத்தில் 2752 தூய்மை பணியாளர்கள் 100 மீட்டர் நீளத்திலும் 70 மீட்டர் அகலத்திலும் அமர்ந்து கலைஞரின் திரு உருவத்தைப் பதிவு செய்தனர். இந்த பதிவு காலை 7. 23 மணிக்கு துவங்கி காலை 8.43 மணிக்கு நிறைவு பெற்றது. இந்த நிகழ்ச்சி உலக சாதனை (Triumph) புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டது. அதற்கான சான்றிதழை அமைச்சர் பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன், ஆட்சியர் சங்கீதா, வடக்கு சட்டமன்ற உறுப்பினர் கோ. தளபதி, மேயர் இந்திராணி பொன் வசந்த், மாநகராட்சி ஆணையாளர் பிரவீன் குமார் ஆகியவரிடம் வழங்கப்பட்டது. மேலும் இந்த நிகழ்ச்சியில் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் புதூர் பூமிநாதன், மண்டல தலைவர்கள் கவுன்சிலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.